★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 3உ திங்கள் (16—1—56) ★ ★ வெளியீடு: தை 4உ செவ்வாய் (17—1—56) [இதழ் 188

அமெரிக்க அலுவலகங்களில் ஆண்களைவிட பெண்களே அதிகமாம்

நியூயார்க், ஜன. 1[illegible]—

அமெரிக்காவில் தொழிற்சாலைகள், அலுவலகங்கள் [illegible]லாம், பெண்கள் ஏராளமான அளவில் ஆண்களுக்குப் போட்டியாகப் படையெடுக்கின்றனராம்!

பல அலுவலகங்களில், ஏற்கனவே மூன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் பெண்கள் ஆண்களைவிட அதிகமாக இருப்பதாகவும், தொழில் நிறுவனங்களில்கூட நாளுக்குநாள் பெண்கள் [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

'எதிர்கால வாழ்வை நிர்ணயிக்க உறுதிகொள்வோம் வாரீர்'

'பொங்கல் ஒன்றுதான் தமிழர் திருநாள்—தனிப்பெரும் விழா நாள்'

சென்னையில் பொதுச்செயலாளர்

சென்னை, ஜன. 16—

"நமக்கெல்லாம் ஆண்டிலே அமைகின்ற ஒரு விழா நாள்தான் இந்தத் திருநாள்; மற்றவர்களுக்கெல்லாம் விழா நாட்கள் பல இருக்கின்றன—நாம் விழாக் கொண்டாடுவதற்கு இந்த ஒரு நாள்தான் ஏற்றதாக இருக்கிறது.

"இந்தத் திருநாள் பொங்கல் விழா—உழவர் விழா—உயர் விழா. மனிதன் காட்டுமிராண்டியாக இருந்தபோது உழவுத் தொழிலைத்தான் செய்துவந்தான். வயிற்றுப் பசியைத் தீர்த்துக்கொள்ள உழவன், முதன்முதலில் உழவுத் தொழிலைக் கற்றுக்கொண்டான். உழவுத் தொழிலால், உழவன், வாழ்க்கையிலே உயர்வடைந்ததையும், இன்பம் அடைந்ததையும் கருதி - எண்ணி எண்ணி, இந்த அறுவடை நாளைத் திருநாளாகக் கொண்டாட ஆரம்பித்தான்.

"இவ்விழாதான் நமக்கு—தமிழருக்கு—திராவிடருக்கு உரிய விழா; மற்ற விழாக்களெல்லாம் நமக்கு உரிய விழாக்களல்ல; மற்ற விழாக்களின் பெயர்களைப் பார்க்கும்போதே அவை நம் விழாக்கள் அல்ல என்ற உண்மையை அறிய முடியும்.

"'சரஸ்வதி பூஜை'—'சரஸ்வதி' என்ற சொல் தமிழ் அல்ல; 'பூஜை' என்ற சொல்லும் தமிழ்ச் சொல் அல்ல—இரண்டு சொற்களுமே தமிழ்ச் சொற்கள் அல்ல.

"'விநாயகர் சதுர்த்தி'—'விநாயகர்' என்ற சொல்லும், 'சதுர்த்தி' என்ற சொல்லும் தமிழ்ச் சொற்கள் அல்ல; விநாயகர், கி. பி. 7-ம் நூற்றாண்டிற்குப் பின்னர்தான் வந்ததாகத் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களின் ஆராய்ச்சி நமக்குத் தெரிவிக்கிறது.

"'தீபாவளி'—இந்தச் சொல்லும் தமிழ்ச் சொல் அல்ல; தமிழர் விழாவும் அல்ல. பொங்கல் விழா ஒன்றுதான் தமிழர் விழாவாக—திராவிடர் திருநாளாக அமையக் காரணமாக இருக்கிறது. மற்ற விழாக்களெல்லாம் சங்க இலக்கியங்களிலே இல்லை.

"அறுவடை விழா—போருக்குச் சென்றவர்கள் இந்த நாளில் வீடு திரும்புவர்; பொருள் தேடச் சென்றவர்கள் இந்த நாளிலேதான் இல்லம் திரும்புவர்; வெளிநாடு செல்லுவோர் இந்தத் திருவிழாவின்போதுதான் வீடு வந்து விழாக் கொண்டாடுவர்; இந்தத் திங்களில்தான் மரஞ் செடி கொடிகளெல்லாம் பச்சைப் பசேலென்று இருக்கும்; வண்ணமலர் விரிந்து காட்சியளிக்கும்; பயிர்கள் முற்றி உழவர் அறுவடை செய்து பாற்பொங்கல் வைக்கும் இந்நாள்தான் நம் திருநாள். அத்தகு இத்திருநாளில் நம் வசதியைத் தேடிக்கொள்ளவும், எதிர்கால வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் நாம் அனைவரும் உறுதிகொள்வோம்"

—இவ்வாறு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சென்னையில் நடைபெற்ற திராவிடர் திருநாள் விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறினர்:—

"உங்கள் இல்லங்களிலே பொங்கல் பொங்கியிருக்கும்; உங்கள் உள்ளங்களிலே உவகை பொங்கியிருக்கும்.

"உங்கள் உள்ளத்திலே உறுதி பொங்கட்டும்—உடலிலே வீரம் பொங்கட்டும்—திறம் பொங்கட்டும் என்று கூறிக்கொண்டு இந்த உவகையோடு எதிர்காலத்தில் நல்லதொரு நிலைமையை உண்டாக்குவோம் என்று உறுதிகொள்வோம்.

"உறுதிகொள்ளும் இவ்விழாவிலே, எங்கள் நாடு எங்களுக்கு ஆகவும், தமிழ்நாட்டில் ஆதிக்கம் செலுத்திடும் இந்தியை அகற்றிடவும், செந்தமிழைக் காப்பாற்றிடவும், தமிழகத்தை—திராவிடத்தை மீட்டுத் திராவிடநாடு திராவிடருக்கு ஆக்கிடவும் உறுதி கொள்வோம்."

சென்னையில் திராவிடர் திருநாள்

நேப்பியர் பார்க்கில் பல்லாயிரவர் திரண்டனர்

களிப்பூட்டும் நிகழ்ச்சிகள்; கருத்தூட்டும் பேச்சுக்கள்

சென்னை நகரில் திராவிடர் திருநாள் வெகு விமரிசையாக 14—1—56 பொங்கலன்று கொண்டாடப்பட்டது.

நகரத்தின் பல்வேறு வட்டங்களிலும் திருநாளை ஒட்டி, ஏழை எளிய மக்களுக்கு உணவளித்தல், சிறுர்களுக்கு இனிப்பு வழங்கல், ஊர்வலங்கள் நடத்துதல், பல இடங்களில் கொடியேற்றி வைத்தல் போன்ற நிகழ்ச்சிகளை வெகு சிறப்பாக ஆங்காங்குள்ள தி. மு. கழகத் தோழர்கள் நடத்தி வைத்திருக்கின்றனர்.

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தினர், திராவிடர் திருநாளைப் பலரின் பாராட்டுதலையும் பெறும் வண்ணம் கழகத்திற்குப் பெருமை தேடித்தரத் தக்கவகையில் சீருடனும் சிறப்புடனும் கொண்டாடியிருக்கின்றனர்.

மாவட்டக் கழகத்தவர் நடத்திய பொங்கல் விழா, நேப்பியர் பூங்காவில் நடைபெற்றது.

பகல் இரண்டு மணியிலிருந்து, ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி, பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

மைதானம் முழுவதும் பொருத்தப்பட்டிருந்த மின்சார விளக்குகள், பல வண்ண ஒளிக்கதிர்களை உமிழ்ந்து கொண்டிருந்தன.

விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று முடிவுற்றதும், தோழியர் ஜி. கஸ்தூரி குழுவினரின் இன்னிசை அரங்கு, கலையழகுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த மேடையில் நடைபெற்றது.

பின்னர், தோழர் இரா. சண்முகம் அவர்கள் இயக்கப்பாடல்கள் சில பாடியதும், மாலை 6 மணி அளவில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பல்லாயிரவரின் ஆரவாரப் பேரொலிக்கிடையே கழகக் கொடியேற்றிவைத்தார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி சிறிதுநேரம் விழாக் குறித்து உரை நிகழ்த்தியதும், தோழர்கள் கே. ஏ மதியழகன், கா. அப்பாதுரை, சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி ஆகியோர் பேசினர்.

இறுதியாக பொதுச்செயலாளர் அவர்கள், திராவிடர் திருநாள் குறித்து அரியதோர் சொற்பெருக்காற்றினர்.

பொதுச்செயலாளர் அவர்கள், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குத் தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள் வாங்கித் தந்த வெள்ளிக் கோப்பைகளைப் பரிசுகளாக வழங்கினர்.

விழாவின் இறுதி நிகழ்ச்சியாகத் தோழர் செழியன் அவர்கள் எழுதிய 'சிலந்திக் கூடு' என்ற நாடகம் உயர்தரமாக நடித்துக் காட்டப்பட்டது — கழகத் தோழர்களால்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி நவிலலுடன் விழா இனிது முடிவுற்றது.

விழாவில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாகப் பல்லாயிரவர் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் களிப்புற்று, கருத்துப் பெற்றுச் சென்றனர்.

'விசால ஆந்திரம் உடனே அமையவேண்டும்'

புதுடில்லி, ஜன. 15—

தெலிங்கானாவின் எதிர்காலம் குறித்துமட்டும் காங்கிரஸ்மேலிடத் துணைக் குழுவினர் 90 நிமிட நேரம் நேற்று விவாதித்திருக்கின்றனர் என்றும், இதர மாநிலங்கள் உருவாகும்போதே ஆந்திரத்துடன் தெலிங்கானா இணைக்கப்பட்ட விசால ஆந்திர -மாநிலமும் உருவாக வேண்டும் என்பதையே துணைக்குழுவினர் ஆதரிப்பதாயும் கூறப்படுகிறது,

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29-1-56-ல் சிதம்பரத்தில்

நடைபெறும்

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

செங்கோட்டையிலும் பாதி கேரளத்திற்காம்!

மத்திய சர்க்கார் முடிவு?

புதுடில்லி, ஜன. 15—

தென் மாநிலங்கள் அமைப்பில் எழுந்துள்ள சில சில எல்லைத் தகராறுகளைக் குறித்து டில்லி மந்திரிசபையினர், இறுதி நேரத்தில் சில முடிவுகளை மேற்கொண்டனர் என்று தெரியவருகிறது.

செங்கோட்டையில் தென்பாதி கேரளத்துடன் இருப்பது என்று அவர்கள் முடிவு செய்திருக்கிருர்கள் என்று கூறப்படுகிறது.

மாநிலக் குழுவினர், 'செங்கோட்டைத் தாலுகா முழுவதும் தமிழ் நாட்டிற்கு மாற்றப்பட வேண்டும்' என்று சிபாரிசு செய்திருந்தனர்.

பெல்லாரி கர்நாடகத்துடனேயே இருக்க வேண்டும் என்றும், காசர்கோடு வட்டத்தின் ஒரு பகுதியையும் பெல்காம், பீடார் மாவட்டங்களில் சில பகுதிகளையும் கர்நாடகத்துடன் இணைப்பது என்றும் மந்திரிசபையினர் முடிவு செய்திருக்கின்றனராம்.

மத்திய சர்க்கார், மற்றும் காங்கிரஸ் மேலிட முடிவுகள், சரியான போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்காக அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மராட்டியருக்குப் பட்டை நாமம்!

பம்பாய் நகர் மத்திய சர்க்கார் நிர்வாகத்திலாம்

புதுடில்லி, ஜன. 14—

பம்பாய் நகரை மத்திய சர்க்கார் நிர்வாகத்தில் வைத்துக் கொள்வது; விதர்ப்பம் அடங்கிய மராட்டியம், குஜராத் என்ற இரு பெரும் மாநிலங்கள் அமைப்பது — என்ற தமது கடைசி முடிவையே காங்கிரஸ் மேலிடத்தார் உறுதி செய்துவிட்டனர் என்பது திண்ணம் என்று கூறப்படுகிறது.

மராட்டியத்தின் தலைநகரைப் பம்பாயில் அமைக்க வேண்டும் என்று கோரப்பட்டதையும் மேலிடத்தார் [illegible] மறுத்துவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இது குறித்து இன்று வெளியிடுவதாகக் கூறப்பட்டிருந்த முடிவு அறிவிக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்றும், 'தகுந்த நேரத்'தில் முடிவு அறிவிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

1954—55-ல் மொத்தம் 134·9 இலட்சம் டன் சரக்குகளை ஏற்றிக்கொண்டு 2,638 கப்பல்கள் பம்பாய் துறைமுகத்துக்கு வந்தன

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16–1–'56 திங்கள்

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு

வடநாட்டுப் பெரும் முதலாளிகளுள் ஒருவரான டாடாவிற்குச் சொந்தமான இரும்பு உருக்குத் தொழிற்சாலையின் நிர்வாகத்தில், அந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் பங்கு பெறுவது குறித்து முதலாளியும்—தொழிலாளர் சங்கத்தவரும் ஒரு ஒப்பந்தத்தை அண்மையில் மேற்கொண்டிருக்கின்றனர்.

அதைத் தொடர்ந்து ஆமதாபாத்தில் உள்ள ஆலை அரசர்களில் இருவரும் இதுபோன்ற ஒரு முயற்சியில் ஈடுபடப்போவதாகவும் செய்திகள் வந்தன.

இதை ஒட்டி, இந்தியாவில் உள்ள பல்வேறுவகைத் தொழிற்சங்கவாதிகளும், அரசியல்வாதிகளும், தொழில் முதலாளிகளும், சர்க்காரும் தீவிரமாகச் சிந்திக்க முற்பட்டிருக்கின்றனர்.

இந்தியப் பேரரசைப் பொறுத்தமட்டில், அதன் தொழிலாளர் விவகாரத் துறையினர் திட்டக் குழுவிடம் தந்துள்ள சிபாரிசுகளுள் ஒன்ருக, 'தொழில் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெற வேண்டும்; அதற்கான வழிகளைக் காண வேண்டும்' என்ற ஒன்றையும் சேர்த்துக்கொண்டிருக்கிருர்கள்.

தொழிலாளர்களுக்குத் தொழில் நிர்வாகத்தில் பங்கு தரநினைக்கிறேம், படிப்படியாக பல கட்டங்களில்—என்றுதான், இப்போது டாடா கம்பெனி நிர்வாகிகள் தெரிவித்திருக்கின்றனர். இந்த அறிவிப்பு, தொழிலாளர்களுக்கு எந்தெந்த வகையில் நன்மை செய்யவிருக்கிறது என்பதை அனுபவம்தான் சொல்ல முடியும் என்பதல்ல !

இரும்பு உருக்கு உற்பத்தி போன்ற பெரும் கனரகத் தொழில்கள் மட்டுமின்றி, அன்ருட வாழ்க்கைக்குத் தேவைப்படும் சாதாரண பொருள் உற்பத்தித் தொழில்கள்கூட மிகச் சிறியனவாயிருப்பினும், மக்கள் அனைவருக்கும் சொந்தமானதாக — சர்க்காருக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும் என்பதுதான்பொதுவான முற்போக்கு அம்சங்கள் கொண்ட கொள்கையுடையோர் வலியுறுத்திப் போராடிவரும் கோரிக்கையாகும்.

நேரடியாக சர்க்கார் நடத்த முடியாதுபோகிற சிறு சிறு தொழில்களைக்கூட தனிப்பட்டவர்கள் நடத்துவதற்கு மாருக, அந்தத் தொழில்களில் ஈடுபட்டு உடலுழைப்பைத் தரும் தொழிலாளர்களையே கூட்டுறவு முறையில் அவற்றின் தொழில் அதிபர்களாக ஆக்க வேண்டும் என்பதும் முற்போக்குவாதிகளின் கோரிக்கையாக இருந்துவருகிறது.

முற்போக்காளர்தம் இந்தக் கொள்கை, எந்த ஒரு பொருளாதார அமைப்பை இலட்சியமாகக்கொண்டது என்பதும் எல்லோரும் அறிந்ததே !

நாட்டு மக்களில் விழிப்புப் பெற்ருேர், சமுதாயத்தில் ஒரு பிரிவினர் பெரும் முதலாளிகளாக—தொழில் அதிபர்களாக இருந்துகொண்டு, பலரது உழைப்பையும் சுரண்டி தங்களது பண பலத்தைப் பெருக்கிக்கொண்டு, வாழ்க்கையில் பரிபூரண சுகங்களை நிம்மதியாக அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையை மாற்றி அமைக்க வேண்டும்—என்று எண்ணங் கொண்டவர்களாகி வருகின்றனர் என்பதுமட்டுமல்ல—தங்களுக்கு விழிப்பூட்டிய தலைவர்கள் சுட்டிக்காட்டும் வழிகளை—அவை சரியோ தவருே, காலத்திற்கும் நிலைமைகளுக்கும் பொருத்தமானவையோ அல்லனவோ என்பவை பற்றிக் கவலை கொள்ளாமல் அவ்வழிகளை மேற்கொண்டு, தாங்கள் எண்ணும்—விரும்பும் மாற்றத்தைச் சாதிக்க, துரிதமாக இல்லாவிடினும்— ஆற்றலுக்கொப்பச் செயல்படவும் முனைந்து நிற்கிருர்கள் என்று கூறுவது முற்றிலும் தவருன கணக்காகாது.

இந்த நிலைமை வளர்ச்சியினை, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பெரும் முதலாளிகள் உணரத் தலைப்பட்டிருக்கிருர்கள். தங்களது பெரிய நிலைக்கு, எதிர்காலத்தில்—அது நீண்டதாயினும்—பேராபத்து காத்துக் கிடக்கிறது என்பதை உணர்ந்துகொண்டு வருகிருர்கள் என்பதற்கு, தெளிவான சான்றுகளைத் தேடியலைய வேண்டியதில்லை.

மக்களிடை மலர்ந்துவரும் விழிப்புணர்வை, நயவஞ்சகமாகத் திசை திருப்ப, இந்தப் பெரு முதலாளிகளின் விரலசைவிற்கு தங்கள் தலையசைக்கும் இந்தியப் பேரரசின் மூலவர்களும், அவர்களது தொண்டர் அடிப்பொடியாழ்வார்களும் தங்களிடம் சிக்கியுள்ள அரசுரிமையை, அதிகாரத்தை, அதனுல் கிடைத்திருக்கும் போலிப் புகழ் ஆகியவற்றைக் குறைவின்றிப் பயன்படுத்தவும் தவறுவதில்லை.

பெருந் தொழில் அதிபர் டாடா, தனது தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்கு பெறுவர்—அதற்கான வழிகளைத் தொழிலாளர் பிரதிநிதிகளும், நிர்வாகப் பிரதிநிதிகளும் கூடி ஆலோசித்து வகுப்பர் என்று அறிவித்திருப்பது, மக்களிடை வளர்ந்துவரும் முற்போக்குப் பொருளாதார இலட்சியத்தைத் திசை திருப்பும் நோக்கம் கொண்டது என்று தொழிற்சங்கவாதிகள் சிலர் கருதினுல், அதில் தவறென்னவோ ? விளைவுகளையும், நிலைவளர்ச்சிகளையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

இந்தியாவின் உணவு இறக்குமதிகள் 1955-ல் 7 7-இலட்சம் டன்னுக்குக் குறைந்துவிட்டது. 1955-ல் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருள்கள், இருப்பு வைப்பதற்காகவேயன்றி உடனடியான உபயோகத்திற்கு அல்லவாம்.

ஆதிக்கபுரியினர் பெறும் இலாபம்!

வடநாட்டுத் தலைநகரான டில்லி அளவிலும் அழகிலும் வேகமாக உருமாற்றம் பெறுகிறது

பல கோடி ரூபாய்கள் செலவில் வானளாவும் மாளிகைகள்

50 சதுர மைல் நிலப்பரப்பில் புதிய குடியிருப்புகள் முளைக்கின்றன

வடநாட்டுத் தலைநகரமான டில்லிமா நகர் அளவிலும், அழகிலும் தோற்றத்திலும் வேகமாக உருமாறி வருகிறது.

புதுடில்லியை உருவாக்கிய சர் எட்வர்ட் ஜட்யென்ஸ், மற்றும் சர் ஹுக் கீலிங் ஆகிய இருவரது முயற்சிகளைக் கூட, இப்போது கட்டுப்பட்டு வரும் பிரம்மாண்டமான கட்டிட முயற்சிகள் மிஞ்சிவிடுவனவாயுள்ளனவாம்.

இப்போதைய புதுடில்லியைச் சுற்றிலும் மூன்று நான்கு அடுக்கு மாடிகளைக் கொண்ட கட்டிடங்கள் மட்டுமின்றி சாதாரண சிறிய வீடுகளும் புதிது புதிதாகத் தினந்தோறும் முளைத்தவண்ணமிருக்கின்றன.

நரிகளும், முயல்களும் குடிகொண்டிருந்த பெரும் புதர்களாயிருந்த நூற்றுக்கணக்கான ஏகர் நிலப்பரப்பில் டில்லி நகரம் விரிக்கப்பட்டு வருகிறது.

பெரும் மாளிகைகள், கூடங்கள், குடியிருப்புகள், காலனிகள் என்று சுமார் 50 சதுரமைல் பரப்பிற்கு நகர் சுற்றுப்புறம் பரவிவருகிறது.

நவீன இயந்திரங்கள் பல, ஆழமான அஸ்திவாரங்கள் தோண்டுவதற்கும், உயர்ந்த கட்டிடங்களை எழுப்புவதற்கும் பேரிரைச்சலுடன் இரவு பகலாய் இயக்கப்படுகின்றன.

சர்க்கார், தனது பல்வேறு துறை அலுவலகங்களுக்காக எழுப்பிவரும் பிரம்மாண்டமான கட்டிடங்களை அமைப்பதில் மட்டும் நாள்தோறும் சராசரியாக 20 ஆயிரம் பேர் வேலை செய்கின்றனர் என்று மதிப்பிடப்படுகிறது.

இந்த வேலைகளைத் திட்டமிட்டு, மேற்பார்வை செய்யும் சர்க்கார் பொதுமராமத்து இலாகா அதிகாரிகள், நிபுணர்கள் மட்டும் சுமார் 400 பேர்வரை உள்ளனராம்.

மத்திய பொது மராமத்து இலாகா திட்டமிட்டு கட்டிவரும் பெரும் கட்டிடங்கள் மட்டுமின்றி, சர்க்காரின் இதர நிறுவனங்கள் சிலவும் தங்கள் தங்கள் அலுவலகங்களுக்காகப் பெரும் மாளிகைகளை அமைத்து வருகின்றன.

ரிசர்வ் பாங்கி, இந்திய விமானக் கார்ப்பரேஷன் முதலியன போன்ற நிறுவனங்கள் இலட்சக்கணக்கான பணச் செலவில் சொந்தக் கட்டிடங்கள் எழுப்புகின்றன.

இவை மட்டுமா? இந்தியப் பேரரசின் அகதி சீரமைப்பு இலாகாவினர், சுமார் 3,000 வீடுகள்வரை கொண்ட 30 காலனிகள் அமைத்து வருகின்றனர்—அகதிகள் குடியேறி வாழ்வதற்காக !

அவ்வளவுதானு? பெரும் பாங்கிகள், இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் எல்லாம், வானளாவும் மாளிகைகளைத் தங்கள் பெருஞ்செல்வத்திற்கும், பெருமைக்கும், புகழுக்கும் ஏற்ப உருவாக்கிவருகின்றன.

சர்க்காரல்லாத தனிப்பட்டவர்கள் எழுப்பும் இந்த மாளிகைகளுக்கு எவ்வளவு செலவாகிறது ? —எத்தனை ஆயிரம் பேர்கள் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்? —என்பதைத் 'தோராய'மாகக் கூடக் கணக்கிட முடியவில்லை, நிபுணர்களால் ! அப்படியானுல் எத்தனை மகத்தான உருமாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள்.

நடைமுறை நிதி ஆண்டில் மட்டும் (1955 எப்ரல் முதல் 1956 மார்ச் முடிய) இந்திய சர்க்கார், டில்லியில் கட்டிடச் செலவுகளுக்காக மட்டும் 10 முதல் 11 கோடி ரூபாய் வரை செலவிடுவதாக வேலையிலீடுபட்டிருக்கும் பொறியியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு வீடுகள், மற்றும் சர்க்கார் அலுவலகங்கள் கட்டுவதற்கென ரூ. 12½ கோடி ஒதுக்கப்பட்டது. இதில் டில்லி நகரில் மட்டும் ரூ. 11½ கோடி வரை செலவிடப்படுவதேன நிர்ணயிக்கப்பட்டது. இந்தத் தொகையில் பெரும் பகுதியை, மத்தியப் பொது மராமத்து இலாகா செலவு செய்துள்ளது. மார்ச் திங்கள் இறுதிக்குள் முழுத் தொகையும் செலவிடப்படும். இரண்டாம் திட்டத்தில் மேலும் இதே துறைக்காக ரூ. 21 கோடி செலவிடத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 800 ஏகர் நிலம் காலி செய்யப்பட்டு, அங்கு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன; புதிதாக நான்கு காலனிகள் எழும்பியுள்ளன.

உயர்தர அதிகாரிகளுக்கான சகல வசதிகளும் படைத்த மாளிகைகள் மட்டுமின்றி நாலாந்தர சர்க்கார் ஊழியர்களுக்கான வீடுகள்வரை மொத்தமாக 10,000 வீடுகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் புதிதாக உருவாக்கப் பட்டிருக்கிறது.

இரண்டாம் திட்டப்படி, மேலும் 16,000 வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

இப்படி தினந்தோறும் புதுடில்லி வெகு வேகமாக வளருகிறது—அளவில்—உருவில் !

புதிய முறை செகண்டரி கல்வி

'தரத்தை உயர்த்துமே தவிர தாழ்த்தாது'

உமாயூன் கபீர் கருத்து

புதுடில்லி, ஜன. 11—

'செகண்டரி' கல்விக் குழுவின் சிபாரிசுப்படி பல மாநிலங்கள், இந்த ஆண்டு ஜுலைத் திங்கள் முதல், புதிய முறை செகண்டரி கல்வியைப் புகுத்த முற்படும்," என்று, இந்திய சர்க்காருக்கு கல்வி ஆலோசகரான பேராசிரியர் ஹுமாயூன் கபீர் தெரிவித்திருக்கிருர்.

'செகண்டரி' கல்விக்கான அகில இந்தியக் குழுவின் இரண்டாவது கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கபீர் மேலும் குறிப்பிட்டதாவது :-

"செகண்டரி கல்வியில் புகுத்தப்படும் புதிய முறை, உயர்தரக் கல்வியின் தரத்தைக் குறைத்து விடும் என்று சிலர் தவருன எண்ணம் கொண்டிருக்கிருர்கள்.

"செகண்டரி கல்விக்கு ஓராண்டு - சில இடங்களில் இரண்டு ஆண்டுகள் அதிகமாக ஒதுக்குவதினுல், எந்த வகையில் 'தரம்' கெட்டுவிடும் என்று எனக்குப் புலப்படவில்லை.

"ஆண்டொன்றுக்கு இப்போது, 3 இலட்சம் பேர் வரை 'எஸ். எஸ். எல். சி' பரீட்சையில் தேறுகின்றனர். இவர்களில் மிகச் சிலரே கல்லூரிகளுக்குச் செல்கின்றனர். இந்த மாணவர்கள், மேலும் ஒன்று இரண்டாண்டுகளுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் கல்வி பெறுவதினுல் என்ன குடி முழுகிவிடும் ? அதிகமாக ஓராண்டு பள்ளிகளில் படிப்பதினுல், நிச்சயம் அதிகமான கல்விப் பயிற்சி அடைவர் ; எனவே, புதிய முறையினுல் கல்வியின் தரம் வளருமே தவிர - அதிகரிக்குமே தவிர குறையாது"

திரு-கொச்சி சர்க்கார் இந்தி திணிப்பை வரவேற்கிறது?

ஆனுலும், கால நிர்ணயம் கூடாதென்கிறது

திருவனந்தபுரம், ஜன. 11—

"ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியை, இந்திய அரசாங்க அலுவல் மொழியாக்குவதற்கு இப்போதைய நிலையில் கால நிர்ணயம் செய்வது முடியாது—கூடாது" என்று கருத்தறிவித்திருக்கும் திரு-கொச்சி சர்க்கார், ஆங்கிலம், இந்தியாவின் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்காகவேனும் ஒரு தேவையான மொழியாகக் கருதப்பட்டு, நீடித்து இடம் பெறச் செய்யவேண்டும் என்றும் கூறியிருக்கின்றனர்.

இந்தி ஆட்சி மொழிக் குழுவினரின் வினுத் தாளுக்குப் பதிலளிக்கையில் திரு-கொச்சி சர்க்கார், 'ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி முழுவதுமாக இடம் பெறும் காலம் வரையிலேனும், மத்திய பொதுப் பணித் தேர்வுகளில் ஆங்கிலமும் பரீட்சை மொழியாக இடம் பெற வேண்டும்' என்றும் கூறியிருக்கின்றனர்.

"மாநில சட்டசபைகளிலும், மத்திய மக்கள் சபையிலும், வட்டார மொழிகளில் பேசுவதற்கு வாய்ப்[illegible]ளிக்க வேண்டும்; அதே போ[illegible], மக்கள் சபையில் வட்டார மொழிகளில் ஆற்றப்படும் சொற்பொழிவுகளை உடனடியாக இதர மொழிகளிலும் மொழி பெயர்த்துச் சொல்லுகிற ஏற்பாடு வேண்டும்" என்றும் கருத்தறிவித்திருக்கிறது.

இந்தித் திணிப்பை வரவேற்றும் சில சில கருத்துக்களை திரு-கொச்சி சர்க்கார் தெரிவிக்காமல் இல்லை.

மத்திய டிராக்டர் நிறுவனம் இதுவரை மத்திய இந்தியாவில், 'கான்ஸ்' புல் அடர்ந்த பிரதேசத்தில் 10 இலட்சம் ஏகராவுக்கு அதிகமான நிலத்தையும், உத்தர பிரதேசத்திலும், போபாலிலும் முறையே 41,000 ஏக்கராவும், 48,000 ஏக்கரா காடடர்ந்த பிரதேசத்தையும் திருத்திப் பயன்படுத்தியிருக்கிறது.

பல்கலைக் கழகங்களின் சுதந்திரத்தைப் பறிக்க முயற்சி

ஆபத்தான விளைவுகள் குறித்து முகம்மது உஸ்மான் எச்சரிக்கை

சென்னை, ஜன. 12—

"கடந்த ஒரு நூற்றாண்டாக, இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள், சுதந்திரமுடன் இயங்கி வந்திருக்கின்றன; இந்தச் சுதந்திரத்தை ஒழிக்க முயற்சி நடப்பதாக அஞ்சுகிறேன்.

"பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிகளை பணம் சம்பாதிக்கும் உத்தியோகங்களாக மாற்ற நினைப்பது, பெரும் ஆபத்தான விளைவுகளைக் கொண்டதாகும்.

"அரசியல் சட்டப்படி, மாநில மத்திய சர்க்காரின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகம் வகிப்பவர்கள், சட்ட சபைகளில் உறுப்பினர்களாகக் கூடாதென தடை விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, புதிய இந்த முயற்சி அமுல் செய்யப்படுமானால், பல்கலைக் கழகங்கள் சர்க்காரின் மற்றொரு இலாகாவாகிவிடும்; துணைவேந்தர்கள், அந்த இலாகாவின் தலைவர்களாகி விடுவர்; பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் சட்ட சபைகளில் இடம் பெற அனுமதிக்கப்படாவிட்டால், அந்தச் சபைகளின் அறிவும் ஆற்றலும், மதிப்பும் குறையத்தான் செய்யும். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி (முதலியார்) சென்னை மேல் (சட்ட) சபையில், எதிர்க்கட்சித் தலைவராயிருக்கிறார். அங்கு அவர் தரும் கருத்துக்கள் மிக உயர்ந்தனவாகும் அவரது யோசனைகளின் மதிப்பை சர்க்கார் உணர்ந்திருக்கிறது; அவற்றில் பலவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறது; எனவே, பல்கலைக் கழகங்களின் சுதந்திரத்தைப் பறிக்க மேற்கொள்ளப்படும் முயற்சியை முறியடிக்க இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்தும், பொது மக்களும் ஒன்றுசேர்ந்து பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன்,"

என்று, சர் முகம்மது உஸ்மான், சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாக் கொண்டாடுவது பற்றி ஆலோசிப்பதற்காக செனட் மண்டபத்தில் கூடிய கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சரித்திரத்திலேயே இல்லாத அளவு

அதிகமான அமெரிக்கர் வேலையிலீடுபட்டனராம்

டிசம்பர் திங்கள் இறுதியில் அமெரிக்காவில் 6 கோடியே 42 இலட்சம் பேர் வேலையில் இருந்தனர் என்றும், இதுதான் சரித்திரத்திலேயே அதிகமான வேலையாட்கள் எண்ணிக்கை என்றும், இதற்கு முந்திய எந்த ஒரு ஆண்டையும்விட இந்த ஆண்டில் 25 இலட்சம் பேர் அதிகமாக வேலையிலீடுபட்டனர் என்றும் அமெரிக்க சர்க்கார் அறிவித்திருக்கிறது.

விசால ஆந்திர அமைப்பு

போட்டிக் கும்பல்களுக்கிடையே தகராறு; போலீசார் தடியடிப்பிரயோகம்

படேலின் வேண்டாத தலையீடு

செகந்தராபாத், ஜன. 12—

தெலிங்கானா தனி மாநிலமாக இருக்கவேண்டும் என்று கோருவோரும், விசால ஆந்திரம் அமையவேண்டும் என்று கோருவோரும் மோதிக்கொண்ட சம்பவங்கள் சில அறிவிக்கப்படுகின்றன.

விசால ஆந்திரம் அமையவேண்டும் என்ற தங்கள் கோரிக்கையை வலியுறுத்துவதற்காகத் தெலிங்கானா கம்யூனிஸ்டு கட்சியினர், நலகொண்டாவில் கூட்டிய கூட்டம் ஒன்றை, தெலிங்கானா தனி மாநில ஆதரவாளர்களான சில மாணவர் சேர்ந்து கலைத்துவிட்டனர். கூட்டத்திற்கு ரவிநாராயண ரெட்டி என்ற மக்கள் சபை உறுப்பினர் தலைமை தாங்கினார்.

போலீசார் புகுந்து, தடியடிப் பிரயோகம் செய்து குழப்பத்தை அடக்கி, எட்டு மாணவர்களைக் கைது செய்தனர் என்றும், பின்னர் கோபங்கொண்ட மக்கள், கைது செய்யப்பட்ட எட்டு மாணவர்களையும் போலீசாரிடமிருந்து விடுவித்துக் கொண்டனர் என்றும் தெரியவருகிறது.

இதேபோல, தெலிங்கானா தனி மாநில ஆதரவாளர்கள், விசால ஆந்திர மாநிலம் கோருவோர் சிலர் கட்கேஸ்கர் எனும் இடத்தில் கூட்டம் போட முயற்சித்த போதும் தடுத்துக் கலைத்துவிட்டனர் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் பம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவரான எஸ். கே. படேல், தனது சொந்தஹோதாவில் ஐதராபாத் வந்து எல்லாத் தலைவர்களையும் சந்தித்து தெலிங்கானா சிக்கலுக்கு சுமுகமான ஒரு முடிவு தேட முயற்சித்து வருவதாகத் தெரிகிறது.

அவர், தான் காங்கிரஸ் மேலிடத்தால் அனுப்பப்பட்டிருப்பதாக வெளிவந்த செய்திகளை மறுத்துரைத்திருக்கிறார்.

தெலிங்கானா தனி மாநிலமாகத்தான் இருக்கவேண்டும் என்று பலத்த கருத்து நிலவுமானால், ஒரே கவர்னர், ஒரே உயர்நீதிமன்றம், ஒரே பொதுப் பணித் தேர்வுக் குழு — என்று, ஆந்திர, தெலிங்கானா மாநிலங்களுக்குப் பொதுவாக வைத்து சிலநாள் நிர்வாகம் நடத்தலாம் என்றும், பின்னர், தெலுங்கு மக்கள் ஒன்றிப் பழகி, தாங்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்குரிய மனப் பக்குவம் பெற்றுவிட்ட பின்னர், இருமாநிலங்களையும் இணைத்து 'விசால ஆந்திரம்' அமைக்கலாம் என்று ஒரு யோசனையையும் அவர் தெரிவித்தாராம்.

'பரீட்சைக் கொடுமை தொலைய வேண்டும்'

'கல்விப் பயிற்சி மாணவர்களை அறிவாளிகளாக்க வேண்டும்'

கிறித்துவக் கல்லூரித் தலையாயர் கருத்து

திருச்சி, ஜன. 10—

"மாணவர்கள், ஆசிரியர்கள், பரீட்சாதிகாரிகள், பெற்றோர்கள், பொதுமக்கள் எல்லோருமாகச் சேர்ந்து, பரீட்சை எனும் கொடுமையை ஒழித்துக் கட்டி, 'கற்பித்தல்—கற்றல்' என்ற ஒருமுறையை வகுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"பரீட்சைகளை, பரீட்சைகள் என்பதற்காகவே நான் எதிர்க்கவில்லை; ஆனால் கல்வி முறையில், 'எல்லாம் அதுதான் — முடிவே அதுதான்' என்பதாக பரீட்சைகள் அமையக்கூடாது.

"மாணவர்கள் கல்லூரிகளில் பெறும் கல்விப் பயிற்சி அவர்களை அறிவாளிகளாக்க வேண்டும்

"பல்கலைக் கழக ஆசிரியர்களின் பணி, மாணவர்களைப் பரீட்சைகளுக்குத் தயார் செய்வதாக இருக்கக்கூடாது; மாறாக, அவர்களுக்குத் தலைமைப் பொறுப்பேற்கும் பயிற்சியளிப்பதாக இருக்க வேண்டும்.

"ஒரு சமுதாயத்தின் கட்டுப்பாடான உறுப்பினர்களாக வாழ்வதற்கு மாணவர்களைத் தயார் செய்யும் பாசறையாகவே கல்லூரிகள் இருக்கவேண்டும்.

"கல்லூரி வாழ்க்கை, வாழ்க்கைக்கு மனிதர்களைத் தயாரிப்பதாக மட்டும் அமையக் கூடாது; ஆனால், ஒரு பொது முயற்சியில் மாணவர்களும், ஆசிரியர்களும் கூட்டாக ஈடுபடும் முதல் அனுபவமாக கல்லூரி வாழ்க்கை இருக்க வேண்டும்.

"நான் 30 ஆண்டுகளாக ஆசிரியனாக இருக்கிறேன்; இதுவே கல்வி பற்றிய எனது நிரந்தரமான கொள்கையாகும்"

—என்று, சென்னை கிறித்துவக் கல்லூரித் தலையாயரான டாக்டர் ஏ. கே. பாய்ட், இங்குள்ள ஜமால் முகம்மது கல்லூரி மாணவர் சங்கத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இன வேற்றுமையின் எதிரொலி?

வெளிநாட்டு முதலீடுகள் பெரும் அளவு குறைவு

ஜோகன்ஸ்பர்க், ஜன. 13—

பிறந்துள்ள புத்தாண்டு தென்னாப்பிரிக்காவுக்குப் பெருங்கவலையைத்தான் உண்டுபண்ணியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் வரையில் 20 இலட்சம் பவுன்தான் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட முதலீடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது; 1954ல், 490 இலட்சம் பவுன் கிடைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வளவு மோசமாக முதலீடுகள் குறைந்ததற்குக் காரணம், அங்கு நிலவும் அரசியல் சூழ்நிலையேயாகும்.

திராவிட முன்னேற்றக் கழக 2-வது

மாநில மாநாடு

திருச்சியில் 1956 மே திங்கள்

3, 4, 5, 6

வியாழன் வெள்ளி சனி ஞாயிறு

நாட்களில் நடைபெறும்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

'பம்பாய் நகரை மராட்டியருக்குத் தர மறுப்பது சுதேசி காலனி ஆதிக்க நோக்கமாகும்'

காங்கிரஸ் மேலிடம் மீது என். வி. காட்கில் குற்றச்சாட்டு

பம்பாய், ஜன. 15—

"பம்பாய் நகரை மத்திய சர்க்கார் தங்களின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர முடிவு செய்திருப்பதாக வெளிவந்திருக்கும் செய்திகள் உண்மையானால், அந்தத் திட்டம், அரசியல் சட்ட நோக்கத்திற்கு முரணானதாகும். மேலும், பம்பாயில் உள்ள 28 இலட்சம் மக்கள், சட்டசபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்குரிய அரசியல் உரிமையை இழந்து நிற்பர்.

"சம்யுக்த மராட்டியத்திலிருந்து பம்பாய் நகரைப் பிரிக்கும் எந்த ஒரு திட்டத்தையும் எதிர்த்து இறுதிவரை போராட மராட்டியர்கள் தயங்கமாட்டார்கள்.

"மராட்டியத்துடன் பம்பாய் நகர் இணையாவிட்டால், மராட்டியமெங்கும் பெரும் அதிருப்தி நிலவும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

"சிலரது சுயநலத்திற்காகத்தான் பம்பாய் நகரம் மராட்டியத்தில் சேர்க்கப்படாமல் பிரித்து வைக்கப்படுகிறது. இந்தச் செயலுக்கு இதர மொழிக்காரர்கள்தான்—வர்த்தகர்கள்தான் பம்பாய் நகரை வளர்ப்பவர்கள் என்று காரணம் கூறப்படுகிறது.

"இது, 'சுதேசி காலனி ஆதிக்க'த்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

"பம்பாய் நகரம், அங்கு வாழும் இலட்சக்கணக்கான பாட்டாளிகளால் உருவாக்கப்பட்டதாகும்.

"ஒரு உண்மையான மக்களாட்சி நிறுவுவதற்காக மக்கள் எழுப்பும் நேர்மையான கோரிக்கைதான் 'பம்பாய் நகரம் மராட்டியத்திலிருக்கவேண்டும்' என்பதாகும்"

—என்று, பம்பாய் சௌபாதி கடற்கரையில் நடைபெற்ற மிகப் பிரம்மாண்டமானதோர் பொதுக்கூட்டத்தில், பல்லாயிரவரின் ஆரவாரப் பேரொலிக்கிடையே பேசிய என். வி. காட்கில் முழக்கமிட்டிருக்கிறார்.

காச நோய் கண்ட 14 இந்திய மாணவர்

சீனாவில் இலவச சிகிச்சை பெறுவர்

காச நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த 14 இந்திய மாணவர்கள், பீகிங் நகரில் உள்ள ஆசிய மாணவர் காசநோய் மருத்துவ மனையில் இலவசமாகச் சிகிச்சை பெறுவதற்காக சீனாவிற்குப் புறப்பட்டுச் சென்றனர் என்று தெரியவருகிறது.

படீல் முயற்சி முறிவு!

செகந்தராபாத், ஜன. 15—

'விசால ஆந்திரம் அமைப்பதில், தெலிங்கானா தனி மாநிலமாக இருக்கவேண்டும்' என்று கோரும் தலைவர்கள் தகராறு கிளப்புவதை ஒட்டி, அந்தத் தகராறுகளைத் தீர்ப்பதற்காக இரு தரப்புத் தலைவர்களையும் ஒன்று கூட்டி ஒரு சுமுகமான முடிவு மேற்கொள்ளுவதற்கென பம்பாய் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் என். கே. படீல் செய்த முயற்சி தோல்வியுற்றதாகத் தெரியவருகிறது.

இந்த இரண்டு சாராரையும் ஒன்றாகக் கூட்டிப் பேச வைப்பதற்கே முடியாத நிலையில் படீல் பம்பாய் திரும்பிச் சென்றுவிட்டாராம்!

(இதுபற்றிய செய்தி 3-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.)

தெலிங்கானா தனி மாநிலமாக உருவாகாவிடின் ஒத்துழையாமை இயக்கமாம்

ஐதராபாத், ஜன. 13—

"தெலிங்கானா தனி மாநிலமாக உருவாக வேண்டும்' என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டால், பெரியதோர் ஒத்துழையாமை இயக்கம் துவங்கப்படும்" என்று, ஐதராபாத் மாநில தொழிலாளர் சங்கத் தலைவரான பி. எஸ். மகாதேவ் என்பார் குறிப்பிட்டிருக்கிறாராம்.

அவர், 'மாணவர்கள், தொழிலாளர்கள், சில்லரை வியாபாரிகள் இவர்கள் எல்லாம் துவங்கப்படவிருக்கிற அந்த இயக்கத்தில் பணிபுரிய முன்வர வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறாராம்.

அமெரிக்க அலுவலகங்களில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வளர்ந்து வருவதாகவும், இப்போது தொழிற்சாலைகளில் 30 சதவிகிதத்தினர் பெண்கள்தான் என்றும், 1956-ம் ஆண்டில் தொழிலாளர்களில் 40 சதவிகிதத்தினராகப் பெண்கள் இருக்கக்கூடும் என்றும், தங்கள் கணவன்மார்கள் உயிருடனிருந்தாலும்கூடப் பெண்கள் வேலைக்குச் செல்வதாயும் கூறப்படுகிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

17—1—56 கடையம்
18—1—56 வீரவநல்லூர்
19—1—56 அலங்காநல்லூர்

கழகக் கூட்டங்கள்

★

கொலாபா (பம்பாய்)
காமா ஹாலில்
17—1—56 இரவு 8 மணிக்கு
தலைவர்: எஸ். கே. இராசு
பேசுவோர்:
கண்ணதாசன்
எஸ். தியாகராசன்

★

தாராவி (பம்பாய்)
வ. உ. சி. திடலில்
18—1—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு
தலைவர்:
சி. த. மு. இரா. ஆரியசங்காரன்
பேசுவோர்:
கண்ணதாசன்
எஸ். தியாகராசன்
எம். எஸ். கணபதி
த. மு. பொற்கோ

ஏ. எல். சி. கிருட்டிணசாமி

சுற்றுப்பயணம்

ஜன. 17 கீழ்வழித்துணையாங் குப்பம்
18 வேடல்
19 தணிகை போளூர்
20 பெர்னமல்லூர்
21 திருவத்திபுரம்
22 திருவண்ணாமலை
23 ஆவூர்
24 கீழ்பெனாத்தூர்
26 காலை: கொத்தகுப்பம்
மாலை: குடியேற்றம்
27 விளாப்பாக்கம்

அச்சத்திற்கு ஆதாரம்கிடையாதாம்!

பெங்களூர், ஜன. 15—

"தென்னாட்டின்மீது இந்தி திணிக்கப்படுகிறது என்று, தெற்கில் ஒரு பகுதியினர் தெரிவித்த அச்சத்திற்கு ஆதாரமே கிடையாது,"

என்று, அரசாங்க மொழிக் குழுத் தலைவர் கெர், நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

"நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும், இப்பிரச்சினையில் தொல்லைகள் இருக்கின்றன; குழுவின் முன்பு அதுபற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. 'இந்தி பேசாத பிரதேசங்களின் கஷ்டங்களை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்' என்பது, குழுவின் விசாரணை விஷய அட்டவணையில் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது; அப்பகுதிகளின் சார்பில் கூறப்பட்ட கருத்துக்களைக் கருத்தில் கொண்டு, குழு, அவர்களுடைய நலனை மதித்து, ஒரு 'முறை'யை சிபாரிசு செய்யும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லைக் கோரிக்கைகள் ஈடேருவிட்டால்....

'மக்களே வெகுண்டெழுவீர்'

மேற்கு வங்கக் காங்கிரஸ் கட்சி தூண்டுதல்

தமிழ்நாடு காங்கிரசார் பாடம்பெறக்கூறும் தீர்மானங்கள்

கல்கத்தா, ஜன. 13—

"மாநிலங்களின் எல்லைகளை நிர்ணயிப்பது சம்பந்தமாக மத்திய சர்க்காரும், காங்கிரஸ் மேலிடத்தவரும் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படும் முடிவுகள் மேற்கு வங்கத்திற்கு அநீதி இழைப்பனவாக உள்ளன,"

என்று, மேற்கு வங்க பிரதேசக் காங்கிரஸ் செயற்குழுவினர் கூறியுள்ளனர் என்று தெரியவருகிறது.

செயற்குழுவின் அவசரக் கூட்டத்தின்போது;

'மேற்கு வங்க மாநிலத்தின் கோரிக்கைகளை சர்க்காரும் காங்கிரஸ் மேலிடமும் புறக்கணிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறோம்; அப்படிப் புறக்கணிக்கப்படுமானால், இந்த மாநிலத்தில் பெரும் கொந்தளிப்பான சூழ்நிலைகள் உருவாகும் என்று எடுத்துக்கூற விரும்புகிறோம்'

என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாம்.

'மக்கள் இந்த எல்லை விஷயத்தை மிகவும் தீவிரமாகக் கருத்தில்கொண்டு, தங்கள் எண்ணத்தை — உணர்ச்சியைக் கட்டுப்பாடான — சட்ட ரீதியான வழிகளில் எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்'

என்றும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாம்.

'எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துக'

மேல் வங்க மக்களுக்கு இடதுசாரிகள் அறைகூவல்

கல்கத்தா, ஜன 14—

மேற்கு வங்கத்தில் உள்ள இடதுசாரிக் கட்சிகள் எல்லாம் ஒன்று கூடி, மேற்கு வங்க மாநில எல்லை குறித்தக் காங்கிரஸ் மேலிட முடிவை எதிர்த்து, மக்கள் எல்லோரும், வரும் ஜனவரி 21-ந் தேதியை ஒரு 'எதிர்ப்பு நாளா'கக் கொண்டாடுமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

'இந்து மகாசபை,' 'ஜன சங்' என்ற இரு நிறுவனங்களைத் தவிர, இதர எல்லா இடதுசாரிகளும் ஒன்றுகூடி இந்த முடிவை மேற்கொண்டிருக்கின்றன என்று தெரியவருகிறது.

இந்த இடதுசாரிக் கட்சியினர், எதிர்ப்பு நாளன்று மக்கள் கடையடைப்புச் செய்தல், கண்டன ஊர்வலம் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் கூட்டுதல் முதலிய ஆர்ப்பாட்டங்கள் நடத்துமாறு கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

காங்கிரஸ் மேலிடம் மேற்கு வங்கத்திற்கு அநீதி இழைத்திருப்பதாக அவர்கள் குற்றம் சாட்டியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

மேற்கு வங்கம் பற்றிய காங்கிரஸ் மேலிட முடிவு

வட்டாரக் காங்கிரசார் கொதிப்பு

முதன் மந்திரி திடுக்கிட்டாராம்

கல்கத்தா, ஜன. 13—

மேற்கு வங்க மாநிலம் குறித்த மாநிலப் புனரமைப்புக் குழு சிபாரிசுகள் சிலவற்றைத் திருத்திக்கொள்வது என்று காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்திருப்பதாயும், அந்த முடிவு இங்குள்ள காங்கிரஸ் வட்டாரங்களில் பெரும் தீயை மூட்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கொதிப்படைந்துள்ள இந்த வட்டாரங்கள், காங்கிரஸ் மேலிட முடிவை மேற்கு வங்க சர்க்கார் ஏற்கக்கூடாதெனவும், உடனடியாக மந்திரி சபையும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் தங்கள் பதவிகளிலிருந்து விலகவேண்டும் என்று பேசிக் கொள்கின்றன என்றும் கூறப்படுகிறது.

ராய் டில்லி செல்கிறார்!

முதன் மந்திரி ராய் இதுபற்றி இன்னும் கருத்தறிவிக்காவிடினும், காங்கிரஸ் மேலிட முடிவு கேட்டுத் திடுக்கிட்டுப் போனதாயும் கூறப்படுகிறது.

டாக்டர் ராய், முதன் மந்திரி என்[illegible] முறையில் டில்லி சென்று மத்திய சர்க்கார் மூலவர்களையும் இதர காங்கிரஸ் மேலிடத்தவரையும் சந்தித்து இது குறித்து விவாதிப்பார் என்றும் தெரியவருகிறது.

ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம்

அடுத்த பள்ளிக்கூட ஆண்டிலிருந்து (ஜூலை மாதம்) திருவாங்கூரில், பல்கலைக் கழகத்தின் முன்னைய பாடத் திட்டத்தில் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாரத்தில் எட்டு மணி நேரம் இதற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாப் காங்கிரசில் கோஷ்டிச் சண்டை

சச்சாருக்குமுதல்மந்திரி பதவியிலிருந்துசீட்டுகிழிகிறது

புதுடில்லி, ஜன. 14—

பஞ்சாப் சட்டசபை காங்கிரஸ் கட்சியில் நிலவும் கோஷ்டிச் சண்டை முதன்மந்திரி பீம்சென் சச்சார் பதவியிலிருந்து விலகிக் கொள்வதால் மட்டும் முடிவுற்றுவிடக்கூடியதல்ல என்றும், சச்சார் விலகிக்கொண்ட பின்பு அமையும் மந்திரிசபையின் ஆயுட்காலம் நீடிக்கவல்லது என்று கூறுவதற்கில்லை என்றும் தெரியவருகிறது.

முதன் மந்திரி பீம்சென் சச்சார் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளக் கோரியிருந்த விண்ணப்பத்திற்கு மத்திய காங்கிரஸ் சட்டசபை 'போர்டு' அனுமதி தந்துவிட்டதாயும், சச்சாருக்குப் பதிலாக இப்போது அபிவிருத்தித் துறை அமைச்சராயிருக்கும் சர்தார் கைரான் முதன் மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் தெரியவருகிறது.

வரும் ஜனவரி 21-ந் தேதி அன்று பஞ்சாப் சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர் கூட்டம் கூட்டப்பட்டு, அதில் சச்சாரே திரு. கைரான் பெயரைப் பிரரேபிப்பார் என்றும் கூறப்படுகிறது.

சச்சார், சர்தார் கைரான் இருவரும் தேபர், ஆசாத், பந்த் ஆகியோரைத் தனித் தனியாகவும், கூட்டாகவும் சந்தித்துப் பேசிய பின்தான் காங்கிரஸ் மேலிடம் முடிவை அறிவித்தது என்றும் கூறப்பட்டது.

கட்சியின் ஐக்கியம், மாநிலத்தின் நலன் இவற்றைக் கருத்தில் கொண்டே தான் பதவியிலிருந்து விலகிக்கொள்ள முடிவு செய்ததாக பீம்சென் சச்சார் தெரிவித்திருக்கிறாராம்.

புயலால் வீடிழந்துதவிப்போருக்கு மலிவான வீடுகள்?

சென்னை சர்க்கார் உத்தேசமாம்!

சென்னை, ஜன. 15—

புயல், புனலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், முழுமையும் வீடிழந்து தவிக்கும் நிலையிலுள்ளவர்களுக்கு மலிவான முறையில் நல்ல வீடுகளைக் கட்டித் தருவதற்கு மாநில சர்க்கார் உத்தேசம் கொண்டிருப்பதாக விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மலேயா தமிழ் இதழின் மூன்றாவது நன்கொடை

மூன்றாவது தடவையாக, கோலாலம்பூர் (மலேயா) தமிழ் இதழான 'தமிழ் நேசன்', புயல் நிவாரண நிதிக்காக மீண்டும் ரூ 1 இலட்சம் அனுப்பிவைத்துள்ளது. இதுவரையில் இவ்விதழ், ரூ. 2 இலட்சம் நிதி திரட்டித் தந்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.